# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I, KARUR

C.C. No.21/2022

| | |
|---|---|
| | Prosecution PW 1 |
| Deposition of Witness for | Defence |
| | Court |
| Name | : செல்வராஜ் |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| District | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1969 of the day of 04.09.2024

**எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை**

1. நான் கரூர், ராமகிருஷ்ணபுரத்தில் குடியிருந்து தற்சமயம் நூல் கடை வைத்துள்ளேன். சம்பவ சமயத்தில் பிஎஸ்ஜி யான் டிரேடர்ஸ் என்ற பெயரில் நூல் வியாபாரம் ஆயத்த ஆடை வியாபாரம் செய்து வந்தேன். ஆஜர் எதிரியும், நானும் பிஎஸ்ஜி யான் நிறுவனத்தின பார்ட்னராக இருந்து வந்தோம். பிஎஸ்ஜி யான் டிரேடர்சில்

ஒம்./-எஸ்.பி.பரத் குமார்
நீதித்துறை நடுவர் எண்.1, கரூர்

75% பங்குதாரராகவும், ஆஜர் எதிரி 25% பங்குதாரராக இருந்து நடத்தி வந்தோம். நான் தமிழ்நாடு மெர்க்கண்டைல் வங்கியில் பிஎஸ்ஜி யான் பெயரில் கணக்கு உள்ளது. மேற்படி வங்கியில் தொழிலுக்காக ரூ.75,00,000/-ஐ கடனாக என்னுடைய சொத்தை தந்தை பெயரில் வைத்து வாங்கி பிஎஸ்ஜி யான் டிரேடர்சில் முதலீடு செய்து தொழில் நடத்தி வந்தோம். இதற்கிடையில் நான் சொந்த அலுவல் காரணமாக வெளிநாடு, வெளிமாநிலம் போகவேண்டிய சூழ்நிலையால் ஆஜர் எதிரி பொன்னுசாமியை முழு பார்ட்னராக அமர்த்தி நிர்வாகத்தை மேற்கொள்ளும்படி சொன்னேன். ஆஜர் எதிரி என்னுடைய பணத்தை அபகரிக்கும் நோக்கில், துரோகம் செய்யும் எண்ணத்திலும் தவறான கணக்குவழக்குகளை காண்பித்தார். 04.03.2019 ம் தேதி அன்றாட கணக்கு வழக்குகளை எடுத்து பார்த்தபோது, வரவுசெலவில் ரூ.3,84,320/-ஐ வரவு வைக்காமல் வரவுசெலவு விடுபட்டிருந்தது.

2. அதற்கான வரவு செலவுக்கான புத்தகத்தில் இருந்து நகல் எடுத்து விசாரணையின்போது கொடுத்திருந்தேன். தற்சமயம் நீதிமன்றத்தில் அசல் ஆவணங்களை ஒப்பிட்டுப் பார்த்து குறியிடவேண்டுகிறேன். அதுசம்பந்தமாக கணக்கு கேட்டபோது, காண்பிப்பதாகச் சொன்னார். ஆஜர் என்னை கேட்காமல் ரூ.14,56,185/-க்கான நூலை அவருடைய நண்பர்களுக்கு கொடுத்துள்ளார். ரூ.1,50,000/-ஐ லோனாகவும் கொடுத்துள்ளார். இந்த விவரங்களை என்னை கலந்தாலோசிக்காமல் கொடுத்துள்ளார். கணக்கு கேட்டபோது, பங்குக்கூட்டிலிருந்து விலகிக்கொள்வதாகக் கூறினார். நான் அவரிடம் வெளியில் இருக்கும் தொகைகளை வசூல் செய்து தரும்படியும், கணக்கு வழக்குகளை சரிகட்டிவிட்டு பங்குக்கூட்டிலிருந்து விலகிக்கொள்ளும்படி கூறினேன். 10.03.2019 ம் தேதி அலுவலகத்திலுள்ள அனைத்து ஆவணங்களான பங்குக்கூட்டுப் பத்திரம், வாடகை ஒப்பந்தப் பத்திரம், இம்போர்ட் எக்ஸ்போர்ட் சான்றிதழ், காசோலைகள், சீல், குறிப்பேடு, வரவுசெலவு புத்தகங்கள் ஆகியவற்றை ஆஜர் எதிரி எடுத்துக்கொண்டு சென்றுவிட்டார்.

3. 11.03.2019 ம் தேதி கடையை திறந்துப் பார்த்தபோதுதான் எனக்கு தெரியவந்தத. இதுபற்றி கேட்டபோது, ஆஜர் எதிரி போனை எடுக்கவில்லை. வீட்டிலும் இல்லை. 12.03.2019 ம் தேதி நான் தமிழ்நாடு மெர்க்கண்டைல் வங்கிக்கு சென்று வங்கிக் கணக்கைச் சோதித்தபோது, 11.03.2019 ம் தேதி ரூ.4,20,000/-ஐ ஆஜர் எதிரி ரொக்கமாக

ஒம்./-எஸ்.பி.பரத் குமார்
நீதித்துறை நடுவர் எண்.1, கரூர்

எடுத்துள்ளார். 14.03.2019 ம் தேதி ஆஜர் எதிரி எனது தந்தைக்கு போன் செய்து பங்குக்கூட்டிலிருந்து விலகமாட்டேன் என்றும் கணக்கு வழக்குகளை காண்பிக்கமாட்டேன் என்றும் கூறினார். எனது அப்பா என்னிடம் கூப்பிட்டு பேசச்சொன்னார். நான் ஆஜர் எதிரியிடம் போனில் வங்கியிலிருந்து எடுத்த ரூ.4,20,000/-ஐயும் கணக்குவழக்குகளையும் கேட்டேன். அதற்கு ஆஜர் எதிரி என்னை அசிங்கமாகத் திட்டி, கொலைமிரட்டல் விடுத்தார். 14,15,16,18,19,21,22.03.2019 ம் ஆகிய தேதிகளிலும் ரூ.2,00,000/- வீதம் மொத்தம் ரூ.16,53,000/-ஐ கனரா வங்கியிலிருந்து எடுத்துள்ளார்.

4. மாவட்ட கண்காணிப்பாளரிடம் சென்று புகார் கொடுத்தோம். அந்த புகாரின் பேரில் கரூர் நகர போலிசார் விசாரித்ததில் மொத்தம் ரூ.88,00,000/-ஐ கையாடல் செய்தது தெரியவந்தது. 15 நாட்களில் பணம் கொடுப்பதாகக் கூறினார். ஆனால் தரவில்லை. பின்னர் ஆஜர் எதிரி செந்தூர் முருகன் யான் என்ற நிறுவனம் பினாமி பெயரில் தொடங்கியிருப்பது தெரியவந்து நான் எனது அப்பா, செல்வராஜ், மகேஷ்குமார், கலைவாணன் ஆகியோரும் அந்த நிறுவனத்திற்கு சென்று 28.08.2019 ம் தேதி சென்றோம். அங்கு அவருடைய நெருங்கிய நண்பர் சுதாகர், ஆஜர் எதிரியின் மைத்துனர் சதிஷ் மற்றும் ஆஜர் எதிரி அங்கிருந்தனர். பணம் செட்டில்மெண்ட் செய்வது குறித்து கேட்டபோது, சுதாகர் தேங்காய் உடைக்கும் அருவாவை எடுத்து வந்து என்னுடைய நிறுவனம் இங்கே காலை வைத்தால் வெட்டிவிடுவேன் என்று மிரட்டினார். அவருடைய மைத்துனரும் சுதாகரிடமிருந்து அறிவாளை வாங்கி இங்கேயே வெட்டி புதைத்துவிடுவதாக கொலை மிரட்டல் விடுத்து உன்னால் முடிந்தால் பணத்தை வாங்கிவிடு என்று மிரட்டினார்கள்.

5. அதன் பின்பு கரூர் காவல் நிலையம் சென்று சம்பவம் பற்றி கூறினேன். மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் கொடுத்த புகாரின் பேரில் 05.10.2019 ம் தேதி கரூர் நகர காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்தனர். என்னிடம் காட்டப்படும் புகார் மனு நான் கொடுத்தது. **புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் பார்ம் ஏ ஆஜர் எதிரி பங்குதாரர் என்பதற்கான சான்றிதழ் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. வரவுசெலவுக்கான லெட்ஜர் புத்தகங்கள் 4 அ.சா.ஆ.3,4,5,6 ஆக குறியீடு செய்யப்படுகிறது. கனரா வங்கியிலிருந்து ஆஜர் எதிரி பணம் எடுத்ததற்கான ஸ்டேட்மெண்ட் அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

ஒம்./-எஸ்.பி.பரத் குமார்
நீதித்துறை நடுவர் எண்.1, கரூர்

**தமிழ்நாடு மெர்க்கண்டைல் வங்கியிலிருந்து ரூ.75,00,000/-ஐ கடன் வாங்கியதற்கான ஸ்டேட்மெண்ட் அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** விசாரணையின்போது, மதன்குமார், மணிகண்டன், தர்மலிங்கம் என்பவர்களை சாட்சியாக சேர்த்துள்ளனர். அந்த சாட்சிகள் எனக்கு யார் என்று தெரியாது. போலிசார் என்னை விசாரித்தனர்.

**அரசுத் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க முதல் விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.**

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ஒம்./-எஸ்.பி.பரத் குமார்
நீதித்துறை நடுவர் எண்.1, கரூர்